மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) சம்பந்தப்பட்ட தணிக்கைத் தடை, உரிமக் கட்டணம் கட்டவில்லை என்பதைப்பற்றி இல்லை. தக்க பதிலுக்குப் பின்பு இந்த தணிக்கைத் தடையும் கூட நீக்கப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து தணிக்கையில் கண்டபடி, இந்த பணத்தை வசூல் செய்யவேண்டுமென்று ஒரு வேண்டுகோள் கூட்டம் போட்டு வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா? அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திரு. ராஜலிங்க ராஜாவுக்குச் சொந்தமான மார்க்கெட்டுக்கு 1966-67-க்கான லைசென்ஸ் பாக்கி இருந்தது போலவும், 1967-68-க்கு அப்பொழுதிருந்த தலைவர் நடவடிக்கை எடுக்காதது போலவும் கருதப்படுகிறது. ஆனால், நிலைமை அப்படியல்ல. 1967-68-க்கு லட்சுமணனும் அவரது தோழர் வீரபத்திர மூப்பனாரும் உரிமம் பெறுவதற்கு ரூ. 1,050 கட்டினார்கள். அப்பொழுது திரு. ராஜலிங்க ராஜா அவர்களும் உரிமம் பெற ரூ. 1,050 கட்டினார்கள். 17-3-1967-ம் நாளன்று உரிமத்தை, திரு. எல். பி. லட்சுமணனுக்கும் அவருடைய தோழர் வீரபத்திர மூப்பனாருக்கும் அளிப்பது என்றும் உரிமம் அளிக்கப்படாத ராஜலிங்க ராஜாவுக்கு ரூ. 1,050-ஐ திருப்பிக் கொடுத்துவிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது அதற்கேற்ப ராஜலிங்க ராஜா கட்டிய பணம் திருப்பித் தரப்பட்டது. அது திருப்பித்தரப்பட வேண்டியதில்லையென்று தணிக்கைக் குழு சொல்லியது. இரண்டு பேரும் பணம் கட்டியதன் காரணமாகவும் ஒருவருக்கு உரிமம் அளிக்கப்பட்டதாலும் மற்றொருவருக்குப் பணம் திருப்பித் தரப்பட்டது என்று கூறப்பட்ட அந்த முடிவைத் தணிக்கைக் குழு ஏற்றுக்கொண்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகம்.

* 303 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனித் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1972 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, தனித் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழகத்திலே இன்று நிறுவப்பட்டாலும், தமிழ் மொழியினுடைய ஆழ்ந்த ஆராய்ச்சிக்காக, உலகத் தமிழ் மாநாட்டில் பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கும் ஒதுக்கப்பட்ட பணம் எப்படி செலவழிக்கப்படுகிறது என்று அரசு கண்காணிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் மூன்று, மூன்று லட்சம் ரூபாய் விதம் திருக்குறள் ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்டது. அந்த ஆராய்ச்சித் துறைக்கு ஆராய்ச்சி வல்லுநர்கள் நியமிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் 3 நூல்கள் இதுவரையில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் நூல்கள் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. மதுரைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக இரண்டு நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. ஒதுக்கப்பட்ட பணத்தின் அடிப்படையிலே எத்தனை ஆராய்ச்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமோ அத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டு ஆராய்ச்சி முறையாக நடைபெற்று வருகிறது.

திரு. செ. கந்தப்பன் : அகில உலகக் கல்விப் பண்பாட்டு நிறுவனத்தின் உதவியோடும் மத்திய அரசின் உதவியோடும் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் ஒன்று சென்னையிலே நிறுவுவதுபற்றி முடிவுசெய்யப்பட்டதே, அது உருப்பெற்று விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு இந்தியாவில் மட்டுமல்ல, வேறு நாடுகளிலும்கூடத் தமிழை பல்கலைக் கழக மொழியாக இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசின் உதவியோடு தமிழ்ப் பல்கலைக் கழகங்களாண தமிழக அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டு இருக்கிறது. அதற்குத் தாற்காலிக இயக்குநராக மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சேலம் கல்லூரி முதல்வராக இருந்த திரு. மீனாட்சிசுந்தரம்

அவர்கள் அதற்குச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். மற்றத் துறைகள் எல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன.

கள்ளக்குறிச்சிக்குக் கலைக்கல்லூரி

*304 வினு—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தென்னுர்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் ஒரு கலைக் கல்லூரி கட்டும் திட்டம் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். தருமலிங்கம் : மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள், அங்கே கலைக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் இல்லை என்று சொன்னுர்கள். ஆனல் அந்த இடம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதால் இதைப்பற்றி மீண்டும் பரிசிலனைசெய்து அந்தக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கள்ளக் குறிச்சிக்குப் பக்கத்திலுள்ள விருத்தாசலத்தில் ஒரு கலைக் கல்லூரி இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஆத்தூரிலே ஒரு கல்லூரி வந்து இருக்கிறது. கள்ளக்குறிச்சியிலே ஒரு கல்லூரி வரவேண்டு மென்ருல் 5 லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கப்படவேண்டும், அத்தோடு 40 எக்கர் நிலமும் அளிக்கப்படவேண்டும். தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கல்லூரிகள் பக்கத்திலே பக்கத்திலே அமைந்திருக்கின்ற காரணத்திஞல் புதிதாக இப்பொழுது அங்கே ஒரு கலைக் கல்லூரி தேவையில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய உயர்நிலைப் பள்ளிகள்

*305 வினு—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் 5 மைல் சுற்றளவிற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும் என்று வரம்பு ஏதேனும் உள்ளதா?